**செ. கு. எண்: 015** **நாள்: 20.02.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு **எடப்பாடி K பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 20.2.2017

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், கள்ளிக்குடி உள்வட்டம், தென்னமநல்லூர் கிராமம் அருகே 19.2.2017 அன்று எம். புதுப்பட்டியிலிருந்து திருமங்கலம் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்தும், கள்ளிக்குடியிலிருந்து தென்னமநல்லூர் நோக்கி சென்று கொண்டிருந்த ஷேர் ஆட்டோவும் மோதியதில், ஷேர் ஆட்டோவில் பயணம் செய்த தென்னமநல்லூரைச் சேர்ந்த திரு வெள்ளையன் என்பவரின் மனைவி கண்ணம்மாள், திரு கந்தசாமி என்பவரின் மனைவி குருவு ஆகியோர் சம்பவ இடத்திலேயும்; முனியாண்டிபுரத்தைச் சேர்ந்த திரு மாரிமுத்து என்பவரின் மகன் ராஜபாண்டி என்பவர் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த மூன்று நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விபத்தில் மூன்று நபர்கள் காயமடைந்துள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கும், மருத்துவமனை அதிகாரிகளுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருபவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.9**